16


# அஜ்மீரி க்வாஜா

என்னும்

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ,
கரீப்நவாஸ், (கத்தஸல்லாஹு) அவர்களின்

## ஜீவியச் சுருக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS



SCANNED

உர்துவில் இயற்றியவர் :—
ஸாஹிப்ஜாதா எஸ்.எம். இப்திகார் அலி சாஹிப்
"மதீனு ஹவ்ஸ்,"
[illegible] தர்கா ஷரீப், அஜ்மீர் (இந்தியா)

[illegible]:—ஹாபிஸ். P. A. S. அவர்கள்,
மஜீதியா பிரஸ்,
[illegible]ட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

[illegible]ght. 1949.

Q7:4196w F36
N49
68373

# முக்கிய அறிவிப்பு.

இந்தப் புத்தகத்தை, என்னுடைய அனுமதி பெறாமல், வேறு எவரும் அச்சிடக் கூடாது. சகல உரிமைகளும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதன் முழு உரிமையும் எனக்கே சொந்தமானதாகும்.

இங்ஙனம்,

(ஸாஹிப்ஜாதா) எஸ். எம். இப்திகார் அலி.

இந்தப் புத்தகம் கிடைக்குமிடம்:—

(ஸாஹிப்ஜாதா)

எஸ். எம். இப்திகார் அலி

“மதீனா ஹவ்ஸ்”

ஜால்ரா, தர்கா ஷரீப், அஜ்மீர் (இந்தியா)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ கரீப் நவாஜ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

# ஜீவிய சரித்திரம்

———o———

ஹஜ்ரத் க்வாஜயே க்வாஜகா(ன்), க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ கரீப் நவாஜ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், ஹிஜ்ரீ 530-ரஜப் ஸ்ரீ 14-ந்தேதி (கி. பி. 1136-ஏப்ரல் ஸ்ரீ 18-உ) திங்கட்கிழமை யன்று, 'குராஸான்' நாட்டைச் சேர்ந்த 'ஸஞ்சர்' என்னுமிடத்தில் பிறந்தார்கள். ஹஜ்ரத் க்வாஜா சாஹிபின் தந்தை-பாட்டன் வழி வம்சத் தொடர் (ஸில்ஸிலா)வானது, ஹஜ்ரத் ஸையிதினு இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் போய்ச் சேருகின்றது. ஆகையினுல், நமது ஹஜ்ரத் க்வாஜா அவர்கள், தந்தை வழியில் 'ஹுஸைனி'யாகவும், தாயார் வழியில் "ஹஸனி ஸையித்" ஆகவும் கருதப்படு கின்றுர்கள்.

க்வாஜா சாஹிபுடைய தகப்பனுரின் பெயர் ஹஜ்ரத் க்வாஜா கியாஸுத்தீன் ஹஸன் என்பதாகும்; தாயார் பெயர் ஹஜ்ரத் உம்முல் வரஃ பீபீ மாஹேநூர் என்பதாகும். தாயார் 'ஸாதாத்' வம்சத்தைச் சேர்ந்தவர்; ஆகை யால் ஊர் ஜனங்கள், அந்த அம்மாளைப் பெரிதும் போற்றிப் பாராட்டிக் கொண்டாடி வந்தனர்.

அந்த நாளில், தாத்தாரி ராஜாக்களின் கொடுங் கோன்மை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஸன்ஜார் நகர ஸுல்தான், மேற்படி தாத்தாரி மன்னனுல் தோற்கடிக்கப் பட்டு சீரழிந்தார். பின்னர் தாத்தாரிகள், தம் ஊரில் இருந்து வந்த முஸ்லிம்கள்மீது கொடுமைகள் புரியலானுர்கள்.

ஆகையால் எளிய முஸ்லிம்கள் தங்கள் மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்வான்வேண்டி, நக ரத்தைவிட்டு ஹிஜ்ரத்தாகி, குராஸான் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். இந்த குரர்ஸான் பட்டணத்தில்தான், நமது ஹஜ்ரத் க்வாஜா சாஹிபுடைய பால்யகாலம் கழிந்தது.

ஹிஜ்ரி 545-ல் (கி.பி. 1150-ல்) நம் க்வாஜா சாஹிப் பதினைந்து வயதுள்ள பால்யராக இருந்தார். அப்போது, தகப்பனார் இறந்து விட்டார். அதன் பிறகு சில மாதங் கள் கழித்து அருமைத் தாயாரும் இறந்து விட்டார். தாய் தந்தையை இழந்து அனாதையான நம் க்வாஜா சாஹிப், பலவிதமான துன்பங்களை அடைந்து, மகாப் பொறுமையாகவும் சாந்தமாகவும் இருந்து, தம் தகப்பனார் விட்டுப்போன தொழிலை நடத்தி வந்தார்கள். தகப்பனா ருடைய பிதுரார்ஜிதத்திலிருந்து க்வாஜா சாஹிபுக்கு ஒரு தோட்டமும் ‘பன் சக்கி’ என்ற நீர் இயந்திரமும் கிடைத் தன. இதன் வருமானத்தைக்கொண்டே க்வாஜா சாஹிப் தமது குடும்பச் செலவுகளை செய்து வந்தார்.

குராஸான் பட்டணத்திலும் நம் க்வாஜா சாஹிப், கொஞ்ச காலம்தான் வாழ்க்கை நடத்தி வர முடிந்தது. அப் புறம், அங்கேயும் தாத்தாரிய மன்னர்களின் கொடுங் கோன்மை தாண்டவமாடிற்று. தாத்தாரியர்கள், எத் தனையோ பெரிய பெரிய ஆலிம் உலமாக்களையும், மஹான் களையும் கொன்று ஷஹீதாக்கிவிட்டனர்; மத்ரஸாக்கள், புஸ்தகசாலைகள், பொது ஸ்தலங்களையெல்லாம் கொள்ளை யடித்து நாசமாக்கிவிட்டார்கள். இந்தக்கொலை, கொள்ளை, நாச காட்சிகளை கண்ணாரக் கண்ட நம் க்வாஜா சாஹிபுடைய மனம் பெரிதும் மாறுதல் அடைந்துவிட்டது. லோக ஆசாபாசங்களையெல்லாம்வெறுத்துவிட்டு, அல்லாஹுடைய இபாதத்திலும் தியானத்திலும் சிந்தையைச் செலுத்தலா னார்கள். மேலும் இல்ம் என்னும் மதக் கல்வி கற்று ஞான மார்க்கத்தைத் தெரிந்துகொள்வதற்காக வீட்டை விட்டு கிளம்பிவிட்டார்கள்.

க்வாஜா சாஹிப் இப்படி விசாரப்பட்டுத் திரிந்து கொண்டிருந்தபோது, ஹஜ்ரத் இப்ராஹீம் கந்தோஜி என்ற மஹான், அவ்வூருக்கு விஜயம் செய்து, நம் க்வாஜா சாஹிபுடைய தோட்டத்திலேயே ஓரிடத்தில் தங்கினார்கள். நம் க்வாஜா சாஹிப், மஹான் இப்ராஹீம் கந்தோஜிக்கு, விரிப்புதந்து அமரச்செய்து, தின்பதற்கு நல்ல பழங்களும் பறித்துக்கொடுத்து உபசரித்தார்கள். மேற்படி மஹான் அவர்கள், க்வாஜா சாஹிப் கொடுத்த பழவர்க்கங்களில் சிலதைத் தின்றுவிட்டு, சிலதை தூர எறிந்துவிட்டார்கள். பிறகு தம்முடைய பையிலிருந்து ஒரு துண்டு ரொட்டியை எடுத்து கடித்துக் கொஞ்சம் தின்றுவிட்டு, மிச்சத்தை நம் க்வாஜா சாஹிபிடம் கொடுத்தார்கள். நம் க்வாஜா சாஹிப் அதைப் பிரியத்துடன் வாங்கி அறுவெறுப்பில்லாமல் தின்றார்கள்.

பிறகு அந்த மஹான் எங்கோபோய் விட்டார்கள் அந்த சந்திப்பிலிருந்து நம் க்வாஜா சாஹிபுடைய உள்ளத்தில் அல்லாஹ்வுடைய தியானமும், ஞான ஜோதியும் பிரகாசிக்க லாயிற்று.

பிறகு, க்வாஜா சாஹிப் அவர்கள், தமக்கு உரித்தாயிருந்த அந்தத் தோட்டத்தையும் பன்சக்கி இயந்திரத்தையும் யாருக்கோ விலைக்கு விற்றுவிட்டார்கள். வீடுவாசலில் இருந்த சமான்கள், சொத்துக்கள் எல்லாவற்றையும் அல்லாஹ்வுடைய மார்க்கத்தில், ஏழை எளியோர்களுக்கு தான தருமமாக பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்கள். பிறகு அவ்விடத்தைவிட்டு தீனுடைய இல்மை கற்பதற்காக ஸமர்கந்து, புகாரா முதலிய நகரங்களை நோக்கிச்சென்று விட்டார்கள். இந்த நகரங்களிலே அந்தக்காலத்தில், பெரிய பெரிய உலமாக்களும் ஞானவான்களும் இருந்து, சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லி கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறே, நம் க்வாஜா சாஹிபும், மேற்படி ஊர்களில் தங்கியிருந்து; கல்வியும் ஞானமும்பெற்று அறிவாளியானார்கள். இப்படி சாதாரண கல்விபெற்று முடித்த காலத்தில், நம் க்வாஜா சாஹிபுக்கு 20 வயதுதான் இருக்கும்.

பகிரங்கமான ஞானத்தை அறிந்துகொண்டபின் அந்த ரங்கமான ஞானத்தையும் அறிவதற்காக, க்வாஜா சாஹிப் அவர்கள், அங்கிருந்து புறப்பட்டார்கள். அக்காலத்தில், ஹஜ்ரத் க்வாஜா உஸ்மான் ஹிரூனி (ரலி) அவர்கள் பெயர் மிகப் பிரபல்யமாய் இருந்தது. இப்பெரியார் சிஷ்த்தியா வம்சத்தைச்சேர்ந்த ஷெய்க் என்னும் ஞானகுரு. இப்பெரியார் தங்கியிருந்த பக்தாத் பட்டணத்துக்கே, நம் க்வாஜா சாஹிபும் வந்து சேர்ந்தார்கள். ஷெய்க் க்வாஜா உஸ்மான் ஹிரூனி (ரலி)யின் திருச்சமுகத்தை யணுகி, முரீது பெற்ருர்கள். இவ்வாறு இருபது வருஷ காலம் ஷெய் குடைய சன்னிதானத்திலேயே இருந்து, ஊழியம் புரிந்து, தியானம்செய்து "ரியாஜத்" என்னும் யோகமும், 'சில்லா கஷி' என்ற தவமும் புரிந்து பரிபக்குவம் அடைந்தார்கள். இந்த சிஷ்யரின் வைராக்யத்தையும் பக்குவதசையையும் கண்ட மேற்படி ஷெய்க் அவர்கள் "ஏ முஈனுத்தீனே! நீர் கோரி வந்த காரியம் பூர்த்தியடைந்துவிட்டது" என்று கூறி திருப்தியடைந்தார்கள். அப்போதே ஷெய்க் அவர்கள், தம் சிஷ்யர் நம் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ அவர்களுக்கு "கிலாபத் நாமா"வும் எழுதிக்கொடுத்தார்கள். மேலும் தம்முடைய பெரியோர்கள் வழியாய் தமக்குக்கிடைத்த சில புனிதப் பொருட்களையும் சன்மானமாக க்வாஜா சாஹிபுக் குக்கொடுத்து மரியாதை செய்தார்கள். இறுதியாய் சில விசேஷ உபதேசங்களும் செய்து, நெற்றியில் விசுவாச முத் தம் கொடுத்து, "இனி நீர் என்னுடைய பிரதிநிதியாக இருந்து தூர தேசமெல்லாம் சென்று, ஜனங்களுக்கு ஊழிய மும், இஸ்லாமிய பிரசாரமும் செய்யக் கடவீர்" என்று ஆசீர்வதித்து அனுப்பிவிட்டு, தாம் மோன நிலையில் ஆழ்ந்து விட்டார்கள்.

தமது பீரும் முர்ஷிதுமாகிய ஞான குருவிடம் விடை பெற்று வந்த நம் க்வாஜா கரீப்நவாஜ் அவர்கள், நேரே ஹஜ் ஜுக்காக திருமக்காவை நோக்கிச் சென்ருர்கள். ஹஜ்ஜுக் குப் பின், மதீனமா நகருக்கும் சென்று, நபிகள் நாயகம் ரஸு லுல்லாஹி(ஸல்) அவர்களுடைய திருச்சமுக தரிசனத்துக்

குப்பின், மஸ்ஜிதே நபவீயில் தங்கியிருந்து, கொஞ்ச காலம் ஹதீஸுடைய கல்வியையும் ஓதி உணர்ந்து கொண்டார்கள்.

அங்ஙனம், நம் க்வாஜா சாஹிப், மஸ்ஜிதே நபவீயில் தங்கியிருந்த போது ஒரு நாள் இரவு, கனவில், ஸர்தாரே ஆலம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய புனித தரிசனம் கண்டார்கள். அப்போது, நபிகள் நாதர் (ஸல்) அவர்கள், "ஏ முஈனுத்தீனே! நீவிர் என்னுடைய தீனுல் இஸ்லாத்திற்கு பேரூழியம் புரிய லாயக்கானவர். ஆகவே, நீர், ஹிந்துஸ்தானத்திற்குச் சென்று அங்கே இஸ்லாமிய பிரசாரம் புரிவீராக" என்று கட்டளையிட் டருளினார்கள். உடனே நம் க்வாஜா சாஹிப் அவர்கள், கண் விழித்து மிக்க ஆனந்தம் கொண்டார்கள். மேற்படி கட்டளையை நிறைவேற்றுவான் வேண்டி, எம்பெருமானார் (ஸல்) அவர்களது புனித ரவ்லாவின் வாயல்படியை முத்தமிட்டு, பிரதிக்ஞைசெய்து விட்டு, மதீனா நகரைவிட்டுப் புறப்பட்டார்கள்.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள், மதீனாவைவிட்டு நேரே பக்தாத் நகரம் வந்து சேர்ந்தார்கள். இங்கு அபரிமிதமான வரவேற்பும் உபசாரமும், ஊர்ஜனங்கள் செய்தார்கள். தரிசிப்பதற்காக ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்தார்கள்.

நம் க்வாஜா சாஹிப் பக்தாதில் தங்கியிருந்த நாட்களில், மஹான்களும் ஞான மணிகளுமான ஹஜ்ரத் ஷெய்க் ஷஹாபுத்தீன் சுஹரவர்தீ (ரஹ்), ஷெய்க் நஜ்முத்தீன் குப்ரா (ரஹ்), அல் ஹத்தீன் கிர்மானி (ரஹ்) ஆகியவர்களை சந்தித்துப் பயன் அடைந்தார்கள். அதே காலத்தில்தான் நம் க்வாஜா சாஹிபின் பிரதம கலீபாவாகிய ஹஜ்ரத் க்வாஜா குத்புத்தீன் பக்தியார் காக்கீ அவர்கள், ஞானம்பெற்று முரீது ஆனார்கள்.

பிறகு நம் க்வாஜா சாஹிபு, பக்தாதைவிட்டுப் புறபட்டு தப்ரேஜ், இஸ்தர் ஆபாத், ஹிராத் முதலிய நகரங்களிலும்

கொஞ்ச கொஞ்சகாலம் தங்கியிருந்துவிட்டு, ஒரே அடியாய் ஹிந்துஸ்தானம் என்னும் இந்த பாரத தேசத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

இந்தியாவுக்கு வரும் யாத்ரா மார்க்கத்தில், நம் க்வாஜா சாஹிப் அவர்கள், ஷெய்க் மஹ்மூத் இஸ்பஹானி, ஷெய்க் நாஸிருத்தீன் இஸ்தராபதீ முதலிய பெரியோர்களை யும் சந்தித்தார்கள். இவ்வாறு சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்தில், குரு உபதேசப்படி, நம் க்வாஜா சாஹிப் அவர் கள், எப்போதும் கப்ரிஸ்தான்களில்தான் தங்கியிருப்பது வழக்கம்.

அந்தக்காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு கூறுவோம்: நம் க்வாஜா சாஹிப் ஓர் இடத்தில் தங்கி யிருந்தார்கள். அப்போது, பீர்-முர்ஷித் ஹஜ்ரத் உஸ்மான் ஹிரூனி (ரலி) அவர்களுக்கு நம் க்வாஜா சாஹிபைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. எனவே அந்த ஹஜ்ரத், தமது மூரீதுகளில் ஒருவரான க்வாஜா பக்ருத்தீன் அவர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு, நம் க்வாஜா சாஹிப் இருக்கு மிடத்தை தேடிக்கொண்டு புறப்பட்டார் கள். கடைசியில் இருவரும் நம் க்வாஜா கரீபே நவாஜ் (ரஹ்) அவர்களைக் கண்டு தரிசித்துப்பேசவேண்டிய விஷ யங்களைப்பேசி முடித்தனர். பின்னர், ஹஜ்ரத் பீர் உஸ் மான் ஹிரூனி (ரலி) அவர்கள், தம் சிஷ்யராகிய க்வாஜா பக் ருத்தீன் அவர்களையும் நம் க்வாஜா சாஹிபுடன், ஹிந்துஸ் தானத்துக்குப்போய் இஸ்லாமிய சேவைசெய்யும்படி அனுப்பிவைத்தார்கள்.

இங்ஙனம் புறப்பட்ட நம் ஹஜ்ரத் க்வாஜா கரீபே நவாஜூம், க்வாஜா பக்ருத்தீனும், சஹஸ்வார் என்ற இடத் திற்கு வந்து சேர்ந்து, அங்கோர் உத்தியானவனத்தில் தங்கினார்கள். அந்தத் தோட்டமானது அந்த ஊரை ஆண்டுகொண்டிருந்த ஹாக்கிம் ஷெய்க் முஹம்மத் யாத் காருக்குச் சொந்தமானது. அந்த ஹாக்கிம் கொடுங்கோல்

மன்னனாக யிருந்தான். அந்த ஹாக்கிமும் ஏதோ காரிய மாக அத்தோட்டத்துக்கு வந்தான். தன் தோட்டத்தில் இரண்டு அன்னிய பேர்வழிகள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு கோபங்கொண்டான். நம் க்வாஜா சாஹிபை அலக்ஷி யம் செய்து பேசினான். இருவருக்கும் வாக்குவாதம் நடந் தது.

இறுதியாக நம் க்வாஜா சாஹிப் அவர்கள், மகா கோபாவேசத்தோடு அந்த ஹாக்கிமை கூர்ந்து பார்த்தார்கள். அவ்வளவுதான். திடீரென்று அந்த ஹாக்கிம் புத்திமயங்கி கீழே விழுந்துவிட்டான். ஹாக்கிமுடன் வந்திருந்த அதி காரிகளும் ஊழியர்களும் இந்தச் சம்பவத்தைக் கண்டு திடுக்கிட்டுவிட்டனர். நம் க்வாஜா சாஹிப் ஒரு பெரிய மஹான் என்பது அவர்களுக்குத் தெரிந்தது. எனவே, எல் லோரும் க்வாஜா சாஹிபுடைய காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, நம் க்வாஜா சாஹிப், கொஞ்சம் தண்ணீர் எடுத்து ஏதோ ஓதி ஊதி 'தம்' செய்து, அதை கீழே வீழ்ந்து கிடந்த ஹாக்கிமுடைய முகத்தில் தெளித்தார்கள். ஹாக்கிம் புத்தித் தெளிந்து எழுந்து, நல்ல புத்தியோடு, நம் க்வாஜா சாஹிபுடைய பாதங்களில் வீழ்ந்து, தன் பிழையை மன்னிக்கும்படி மன்றாடி, தன்னையும் ஒரு 'முரீதாக' ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டான். க்வாஜா சாஹிபு அவனை ஏற்றுக்கொண்டார். பிறகு அந்த ஹாக்கிம், தன்னுடைய சொத்து செல்வம் எல்லாவற்றை யும், தன்னுடைய ஆத்ம குருவாகிய நம் க்வாஜா சாஹி புக்கு காணிக்கையாக சமர்ப்பித்துவிட்டு, க்வாஜா சாஹிபுட னேயே புறப்பட்டுவிட்டான்.

பிறகு, நம் க்வாஜா கரீப் நவாஜ் அவர்கள், தம்தோழர் களோடு பலக் என்ற ஊருக்கு வந்து சேர்ந்து, அங்கே ஹஜ்ரத் ஷெய்க் அஹ்மத் கிஜ்ரவியா அவர்களுடைய ஜாகையில் தங்கியிருந்தார்கள். அப்போது, நம் க்வாஜா சாஹிப், ஊருக்கு அருகில் பிரவேசித்து அங்கு சில பட்சி களை வேட்டையாடி தம் சிஷ்யரிடம் கொடுத்தார்கள். சிஷ்யர்

(க்வாஜா பக்ருத்தீன்) அதனைச் சுட்டு 'கபாப்' செய்து கொண்டிருந்தார். இந்த சமாசாரத்தை கேட்ட ஊர் அதிகாரியான ஜியாவுத்தீன் பல்ஸபி என்பவன், நம் க்வாஜா சாஹிபிடம் வந்து, வீண் விதண்டாவாதம் செய்யலானன். அப்போது க்வாஜா சாஹிப் 'கபாப்' தின்று கொண்டிருந்தார். ஒரு கபாப் துண்டை எடுத்து அந்த அதிகாரிக்கும் கொடுத்தார்கள். அதை அந்த பல்ஸபி (தத்துவ ஞானி) வாங்கிப் புசித்ததும்தான் படித்த படிப்பையெல்லாம் மறந்து, குழந்தைபோலாகி விட்டான். பிறகு க்வாஜா சாஹிப் மீண்டுமொரு கபாபை அவனுக்கு தின்னக்கொடுத்தார்கள். இதைத்தின்றதும், நல்ல புத்தி யுண்டாகி, சாந்தமான குணத்தையடைந்து, நம் க்வாஜா சாஹிபுடைய காலில் விழுந்து, மன்னிப்பு கேட்டு, முரீதாகிவிட்டான். பிறகு அந்த மனிதர், க்வாஜா சாஹிபுடைய கடாக்ஷத்தால் பெரிய ஞானியாகி மௌலானா ஜியாவுத்தீன் பல்ஸபீ என விளங்கினர்.

பிறகு நம் க்வாஜா சாஹிப், கஜ்னீ என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கு க்வாஜா அப்துல் வாஹித் கஜ்னி (ரஹ்) என்ற மஹானை சந்தித்தார்கள். இங்கு சில நாள் இருந்துவிட்டு, ஹிந்துஸ்தானத்தில் பிரவேசித்து 'லாஹூர்' என்ற நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

நம் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தியவர்கள் லாஹூருக்கு வந்து சேர்ந்தபோது அவர்களுடன் 40-தோழர்கள் இருந்தார். எல்லோரும் அங்கு, மக்தூம் அலிதாத்தா கன்ஜ் பக்ஷ் (ரஹ்மஹுல்லா) என்ற பெரியாருடைய 'கான்காஹ்'வில் தங்கியிருந்தார்கள். இந்தப் பெரியார் ஹிஜ்ரி. ஐந்தாவது நூற்றாண்டில், மாபெரும் மஹானக விளங்கிய ஞானவான் ஆவார்.

நம் க்வாஜா சாஹிபுடன் தோழர்களா யிருந்த நாற்பது சிஷ்ய கோடிகளின் பெயர் விபரங்களை முழுவதாக, எந்த சரித்திரக்காரரும் எழுதிவைக்கவில்லை. ஆனல் க்வாஜா பக்ருத்தீன், ஷெய்க் முஹம்மத் யாத்கார்-மற்றும் சில பெரியோர்

களின் பெயர்கள் மட்டும்தான் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவர்களில் 'அவத்' என்ற ஊரின் பிரபல காஜியாக யிருந்த 'ஹஜ்ரத் காஜி கித்வா' என்பாரும் ஒருவர். இவர் நம் க்வாஜா சாஹிபின் பீர் பாஹீ (ஞான சகோதரர்) ஆன தால், எல்லா 'கித்வாயி'களும், காஜி கித்வா அவர்களின் மக்களே யாவார்கள்.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள், லாஹூரில் இரண்டு மாதம் தங்கியிருந்துவிட்டுப் பிறகு தம் 40 சிஷ்ய கோடி களாகிய தோழர்களோடு ஒரே ஜமாஅத்தாக, இந்தியாவின் தலைமை பட்டணமாகிய தெஹ்லி (டில்லி)க்கு வந்து சேர்ந் தார்கள். இதற்கு முன்னால் எந்த முஸ்லிம் மன்னரும் ஹிந் துஸ்தானத்தின் எல்லையைக் கடந்து உள்ளே பிரவேசித்தது கிடையாது. எந்த பக்கீர்-தர்வேஷும் இந்தியாவின் எல்லைக் குள் நுழைந்தது கிடையாது. காரணம் என்னவென்றால் அந்தக்காலம் மகா நெருக்கடியானதாக யிருந்தது. ஹிந்துஸ் தானத்தில் வாழ்ந்த ஜனங்கள், தங்கள் மதாசாரியர்களான ஸ்ரீராமசந்திரர், ஸ்ரீகிருஷ்ண பகவான், மஹாத்மா கௌதம புத்தர் முதலியவர்களின் இதோபதேசங்களாகிய ஏக தெய்வ வழிபாட்டை கைவிட்டு, மறந்து, மனம்போனபடியெல்லாம், விக்கிரகம், மரம், மிருகங்கள் முதலிய கண்ட பொருளை யெல்லாம் தெய்வமென எண்ணி, பூசைசெய்து வந்தார்கள். மதத் தத்துவப்படியான நல்லொழுக்கம், நல்ல குணம் இல்லா மல் சீர்கெட்டுப் போயிருந்தார்கள். எனவே இப்படிப்பட்ட அனுசாரங்களைப் போக்கி, சத்தியம் நற்குணம், ஏக தெய்வ வணக்கம் முதலிய இதங்களை போதிக்கத் தக்க ஒரு வழி காட்டி தேவையாக யிருந்தது.

எனவே, நமது ஞான வழிகாட்டியான க்வாஜா முஈனுத் தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்கள், தமது நாற்பது தோழர்களோடு இந்தியாவின் தலைநகருக்கு வந்து சேர்ந்தது ரொம்பவும் நன்மையாகவே ஆயிற்று.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள், லாஹூருக்கு வந்தி ருந்தபோதும், டில்லிக்கு வரும்பாதையில் ஆங்காங்கு, தங்கி

யிருந்தபோதும், அவ்வவ் விடத்து ஜனங்களுக்கு சத்திய மார்க்கத்தை எடுத்துரைத்து, ஞான போதனைகளைப் புகட்டி, குணங்களை சீர்திருத்தி, இந்தியர்களை இஸ்லாத்தின் பக்கம் நல்ல முறையில், அழைத்து பிரசாரஞ் செய்து வந்தார்கள்.

நம் க்வாஜா சாஹிப், லாஹூரிலிருந்து டில்லி வந்து சேரும் பிரயாணத்தில்மட்டும், வழிநெடுக, 700 பேர்களுக்கு மேல் இஸ்லாத்தில் சேர்த்து, முஸ்லிம்களாக்கினார்கள் என்று மிஸ்டர் ஆர்னல்டு என்ற அறிவாளி "இஸ்லாத்தின் அழைப்பு" என்ற தம் நூலில் எழுதி வைத்துள்ளார். இவ் வாறே, லாஹூரிலிருந்து அஜ்மீர் வந்து சேரும்வரை வழி யில் எத்தனை நூறுபேர்கள் இஸ்லாத்தில் சேர்ந்திருப்பார் களோ!

* * *

நம் க்வாஜா கரீப் நவாஜ் முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், லாஹூர், டில்லி, அஜ்மீர் முதலிய இடங் களில் முகாம் செய்து, இஸ்லாமிய போதனை புரிந்த காலத்தில், எத்தனையோ இடையூறுகளும், சோதனைகளும், துன்பங்களும் இழைக்கப்பட்டன. எத்தனையோ வித மாய மந்திரத்தாலும், சூனிய சைன்யத்தாலும் எதிர்ப்பும் போராட்டங்களும் புரியப்பட்டன. ஆயினும் நம் க்வாஜா சாஹிப் அவர்கள், அல்லாஹு-ரஸூலுடைய திருநாமத் தைச்சொல்லி, எல்லா சங்கடங்களையும் எதிர்த்து ஜெயித்து, சத்தியத்தை நிலை நாட்டினார்கள். இவைகளை யெல்லாம் இச்சிறு பிரசுரத்தில் விபரமாய் கூறுவதென்றால், இடமும் போதாது; காலமும்போதாது. உதாரணத்துக்கு இரண் டொன்றை சுருக்கமாய் கூறுகிறேன் :—

(1) அக்காலத்தில் டில்லி அஜ்மீரை ஆண்டு கொண் டிருந்த ராஜா ராயபத்தூராவுடைய தாய், ஜோதிடமும் மாயமந்திரமும் அறிந்தவராய் இருந்தாள். அவள் தம் பிள் ளைக்கு சிறு வயதிலேயே, நம் க்வாஜா சாஹிபின் வருகை யைப் பற்றி எச்சரிக்கை செய்து, வந்தாள் எதிர்த்துப்

போராட வேண்டாம் என்று உபதேசம் செய்திருந்தாள். ஆனால், அந்த ராஜா, டில்லியில் நம் காஜா சாஹிப் விஜயம் செய்து கீர்த்தி நிலைநாட்டிய போது, துவேஷத்தால், க்வாஜா சாஹிபுக்கு தொந்தரவு கொடுத்து, எதிர்த்துப் போராடி, கடைசியில் தோல்வி யடைந்து, மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

(2) மேற்படி ராஜாவின் சொந்தக்காரனான உஜய் பால் ஜோகி என்பவனும், நம் க்வாஜா சாஹிபை எதிர்த்துப் போராடினான். பல ஜால வித்தையும், மாயச் செயல்களும் புரிந்தான். அவை எல்லாம் நம் க்வாஜா சாஹிபின் 'கராமத்' என்னும் அற்புதத்தின் முன் அழிந்தொழிந்தன. கடைசியில் இவனும் தோல்வியடைந்து, மனம்மாறி மன் னிப்புகேட்டு, இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிமானான்.

பிறகு இந்த ஜோகி ஜெய்பால், நம் க்வாஜா சாஹிபை தன் வீட்டுக்கு அழைத்துப்போய் உபசரித்து, தன் வீடு வாசல்களையே க்வாஜா சாஹிபுக்கு காணிக்கையாக கொடுத்து விட்டான். அந்த வீடுதான் இப்போது, அழகிய, கம்பீரம் வாய்ந்த 'தர்கா ஷரீபாக' விளங்கி வருகிறது.

* * *

அஜ்மீரின் கண் ஞானச் சுடராக விளங்கும் நம் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், ஹிந்துஸ்தானத்தில் விஜயம் செய்த காலத்தில், அன்னாரிடம் எவ்விதமான பட்டாளமும் சேனையும் இருந்தது கிடையாது; எத்தகைய் கத்தியும் கப்படாவும் இருந்தது கிடையாது. இஸ்லாமிய சன்மார்க்கத்தின் சத்திய போதனையும், ஞான உபதேசங் களும்தான் இருந்தன. இதன் உதவியைக்கொண்டே, பல்லா யிரக் கணக்கான ஜனங்களுடைய மதிப்பும் கௌரவமும் சிறப்பும் பெற்று, எல்லோர் ஹிருதயங்களிலும் ஞான ஜோதியை உண்டாக்கினார்கள். இவ்வித நல்லுபதேசத்தினால், ஆயிரக்கணக்கான பேர், க்வாஜா சாஹிபுடைய திருச்சமுகத் தில் வந்து மனப்பூர்வமாய் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு முஸ்லிம்களானார்கள்.

இவ்வாறே, நம் க்வாஜா சாஹிப் அவர்கள், ராஜா-மகா ராஜாக்களுக்கும் இஸ்லாத்தின் சிறப்பை எடுத்துக்கூறி, சாந்தமான முறையில் இஸ்லாத்திற்கு அழைத்தார்கள். அக் காலத்தில் அஜ்மீரை ஆண்டுகொண்டிருந்த ராஜாவுக்கு, இஸ்லாத்தின் பெயரால் அழைப்புக்கடிதம் அனுப்பினர்கள். அந்த ராஜா இதைப் படித்ததும் மகா கோபாவேசங்கொண்டான். க்வாஜா சாஹிபுக்கு எதிரியானன். தன்னுடைய ராஜ்யத்தில் யார் யார் முஸ்லிமானர்களோ அந்தப் பிரஜைகளுக்கு துன்பங்களையும் கஷ்டங்களையும் உண்டாக்கினன். சில நாள் கழித்து அந்த ராஜா, க்வாஜா சாஹிபுக்கு ஓர் எச்சரிக்கையும் அனுப்பினன். "நீவிர், இன்னும் ஒரு வாரத்துக்குள், இந்த ஊரை விட்டு ஓடிப்போக வேண்டும். இல்லாவிட்டால், நீரும் உமது ஆட்களும் சீர் அழிந்து போக வேண்டியதுதான்" என்பதே அந்த ஆக்ஞை.

இந்த எச்சரிக்கைக் கடிதத்தை படித்ததும் க்வாஜா சாஹிபுக்கும் தோழர்களுக்கும் வீர இரத்தம் கொதித்தது. க்வாஜா சாஹிப் அவர்கள், அந்தக் கடிதத்தை சுக்கு நூருக் கிழித்து எறிந்துவிட்டு, தம் தோழர்களை நோக்கி "ஹா! இந்த ராஜன் நம்மையா ஊரைவிட்டு ஓடச்சொல்கிறன். இஸ்லாத்தின் தற்காப்புக்காக, இவனையே நாம் ராஜ்யத்தை விட்டு ஓடச்செய்வோம்" என்று சபதம் கூறினர்கள்.

இந்த சபதத்தை, சாதுவாகிய க்வாஜா சாஹிப் தம்கையால் நிறைவேற்ருவிட்டாலும், கி.பி. 1193-ல் (ஹி: 589-ல்) ஹிந்துஸ்தானத்தின் மீது படையெடுத்து வந்த ஷஹாபுத்தீன் கோரி செய்து முடித்தார். பெரிய போர் நடைபெற்று, ராஜாபுத்ாரா கைது செய்யப்பட்டு துரத்தப்பட்டான். அவனுடைய சிம்மாஸத்தில், தன்னுடைய அடிமைகளில் ஒருவரான குத்புத்தீன் ஏபக்கை, ஜெயசீலரான ஷஹாபுத்தீன் கோரி அமர்த்தி, ராஜ்யத்தை ஒப்புக்கொடுத்தார். அப்புறம்தான் தெரிந்தது ஷஹாபுத்தீன் கோரிக்கு-அஜ்மீரில் ஒரு பெரிய மஹான் இருந்து வருகிருர் என்ற விஷயம். உடனே சுல்தான் கோரி, க்வாஜா சாஹிபுடைய திருச்சமு

கத்தில் வந்து தரிசித்தார். ஆஹா, என்ன ஆச்சரியம்! தம்முடைய கனவில் வந்து, "இந்தியாவின் மீது நீ படையெடுத்துச்செல்; வெற்றி கிடைக்கும்" என்று உத்தரவிட்ட மஹான் இவர்தான் என்பதை தெரிந்து சந்தோஷப்பட்டார்.

அப்புறம் சுல்தான் குத்புத்தீன் ஐபக், ஹஜ்ரத் மீரான் செய்யித் ஹுஸைன் குனுக்ஸவார் அவர்களை, அஜ்மீருக்கு அதிபதியாக்கி அனுப்பி வைத்தார். இவர் தாராகட் கோட்டையில் இருந்து, தமது அரசாங்கத்தை நடத்தி வந்தார். இவருக்கு நமது க்வாஜா சாஹிப் இடம் அபரிமிதமான விசுவாசமும் பக்தியும் இருந்தன.

இவ்வாறு ஹிந்துஸ்தானத்தில் இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, நமது கரீபே நவாஸ் க்வாஜா சாஹிப் அவர்கள், தமது ஞான சகோதரர்களையும், முரீதுகளையும் தேசத்தின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பிவைத்து, இஸ்லாமிய பிரசாரம் புரியுமாறு செய்தார்கள். ஆனால் க்வாஜா பக்ருத்தீன், மௌலானா அஹ்மத், ஷெய்க் முஹம்மத் யாத்கார், ஷெய்க் நிஜாம் ஆகிய நான்கு தோழர்களை மட்டும் தம்முடைய சன்னிதானத்திலேயே வைத்துக்கொண்டார்கள்.

ஸுல்தான் குத்புத்தீன் ஐபக், ஹி. 607-ல் இறந்துவிட்டார் என்ற செய்திகேட்டதும், அஜ்மீரில் அடங்கிக் கிடந்த ஹிந்து டாக்குர்களும், ஜாகீர்தார்களும் கிளர்ச்சியும் புரட்சியும் செய்து, தாராகட் கோட்டையை முற்றுகையிட்டு, தந்திரமாய் உள்ளே புகுந்து, தூங்கிக் கொண்டிருந்த முஸ்லிம்களை வெட்டிக் குவித்து, கொள்ளையடித்தார்கள். பிறகு, டில்லியிலிருந்து உதவிக்கு பட்டாளம் வரும் விஷயத்தை கேள்வியுற்றதும் கோட்டைவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

முஸ்லிம்கள் ஏராளமாக, தாராகட்டில் படுகொலை புரியப்பட்ட செய்தியறிந்து நமது க்வாஜா சாஹிப், தமது சிஷ்யர்களுடன்போய், ஹஜ்ரத் மீரான் செய்யித் ஹுஸைன் குனுக் முதலிய தியாகிகளின் பிரேதங்களை எடுத்து நல்லடக்கம் செய்துவிட்டுத் திரும்பினார்கள்.

நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிபின், பிரதம கலீபாவாகிய ஹஜ்ரத் குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்) அவர்கள், குரு உத்தரவுப்படி, டில்லியில் தங்கி, இஷாஅத்தே இஸ்லாம் செய்து, எண்ணற்ற முரீதுகளை உண்டாக்கினார்கள். இவர்களை நேரில் பார்க்க, நம் க்வாஜா சாஹிப் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு சில நாள் தங்கிவிட்டு, கலீபா ஹஜ்ரத் பக்தியார் காகீ அவர்களை கூடவே அஜ்மீருக்கு அழைத்து வந்து, தமக்குப் பகரமாக, தம் ஸ்தானத்தில் அமர்த்தவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் டில்லி வாசிகள், ஹஜ்ரத் பாபா பக்தியாரை பிரிய விரும்பாததால், விட்டு விட்டு, அஜ்மீருக்கு தாம் மட்டும் திரும்பி வந்தார்கள்.

நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள் தம் ஆயுட் காலத்தின் பெரும் பகுதியை பிரம்மச்சாரியாகவே கழித்தார்கள். 80-வது வயதில், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டார்கள். "ஏ முஈனுத்தீனே! நிக்காஹ் என்னுடைய சுன்னத்தாயிற்றே, நீர் இந்த நற்காரியத்தைசெய்து காட்டினால்தானே, முரீதீன்களும் உம்மை பின்பற்றுவர்?" என்று உத்தரவாயிற்று.

நபியின் உத்தரவு பிரகாரம், க்வாஜா சாஹிப் கலியாணம் செய்துகொள்ள முன் வந்தார்கள். எனவே, ராஜாவாக யிருந்து முஸ்லிமாய்விட்ட ஒரு அன்பருடைய மகளாகிய பீபீ அமத்துல்லாவுடன் - நம் க்வாஜா சாஹிபுக்கு நிகாஹ் நடைபெற்றது. கொஞ்ச நாள் கழித்து, இரண்டாவது விவாகம் ஹஜ்ரத் செய்யித் வஜீஹுத்தீன் மஷ்ஹதீ அவர்களுடைய மகள் பீபீ அஸ்மத்துடன் நிறைவேறியது. இந்த நிகாஹ், ஹஜ்ரத் இமாம் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் பெண்ணுடைய தந்தையின் கனவில் கட்டளையிட்ட பிரகாரம் நடைபெற்றதாகும்.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள், நபி ஸுன்னத்தை நிறைவேற்றிய பின், தம்மை பின்பற்றிய, மற்ற முரீதுகள், தோழர்களையும் கலியாணங்கள் செய்து கொள்ளும்படி கட்டளையிட்டார்கள்.

நம் க்வாஜா சாஹிபுக்கு முதல் மனைவியின் வயிற்றில் இரண்டு பிள்ளைகள் (அதாவது ஹஜ்ரத் க்வாஜா பக்ருத்தீன் அஹ்மத், ஹஜ்ரத் க்வாஜா ஹிஸாமுத்தீன் அஹ்மத்) பிறந்தார்கள்; ஒரு பெண் (ஹஜ்ரத் பீபீ ஹாபிஸ் ஜமால்) மாகவும் பிறந்தது. இரண்டாவது மனைவி வயிற்றில் ஒரு பிள்ளை (ஹஜ்ரத் க்வாஜா அபூஸயீது) பிறந்தார்கள். மேற்படி மூன்று ஆண் பிள்ளைகளையும் க்வாஜா சாஹிப் அவர்கள் தாமே வளர்த்து தர்பியத்து செய்து, பெரியவர்களானதும் அஜ்மீருக்கு சற்று அருகிலுள்ள 'நாந்தன்' என்ற ஊரில் விவசாயம் செய்து பிழைக்கும்படி வைத்தார்கள்.

ஹிஜ்ரி 632-ம் வருஷம் ஆரம்பமானது. நம் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்களுக்கு தாம் இதே வருஷத்தில் இந்த மண்ணுலகை நீத்து மவுத்தாக வேண்டு மென்ற ஞானம் உதயமாய்விட்டது. எனவே, எந்தெந்த முரீதுகளை அழைத்து கிலாபத் ஒப்படைக்க நாடினரோ, அப்படியே செய்தார்கள். எந்தெந்த பிள்ளைகளையும் தோழர் களையும் அழைத்து உபதேசம் (வஸிய்யத்) செய்ய வேண்டுமோ, அப்படியே செய்தார்கள்.

ஹிஜ்ரீ 632-ம் வருஷம் ரஜப் மாதம் 5-ந்தேதி இரவு இஷா தொழுகைக்குப் பிறகு, தம்முடைய அறையாகிய 'ஹுஜ்ரா'வுக்குள் போய் கதவை மூடிக்கொண்டார்கள். அன்றிரவெல்லாம் அப்படியே 'இபாதத்தில்' ஆழ்ந்து விட் டார்கள். ஜபதவம் செய்யும் சப்தத்தை, வெளியில் இருந்த முரீதீன்கள் காதார கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால், ஸுப்ஹு தொழுகைக்காக பாங்கு சொல்லப்படுவதற்கு ஒரு விநாடிக்கு முன் மேற்படி சப்தம் நின்றுவிட்டது. ஸுப்ஹு தொழுகைக்காக வழக்கம்போல் திறக்கப்படும் கதவு அன்று திறக்கவே இல்லை. சூரியன் உதயமாகி வெளிச்சமாய்விடவே, சிஷ்ய கோடிகள், மனம் நிம்மதி

68373

யிழந்து, பரபரப்பு அடைந்தார்கள். கதவைத்தட்டி அழைப்ப தற்கு யாருக்கும் தைரியம் வரவில்லை. நம் க்வாஜா சாஹிபுடைய நம்பிக்கைகும் விசுவாசத்துக்குமுரியவரான ஹஜ்ரத் பக்ருத்தீன் அவர்கள், தைரியமாக துணிந்து கதவை உடைத்து உள்ளே நுழைந்து பார்த்தார்கள். ஹா! கரீபே நவாஜ் க்வாஜா சாஹிப் அவர்கள், முழுவதும் துப்பட்டியை போர்த்துக்கொண்டு, சாஸ்வதமான ஒரே தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்ததைக்கண்டு திடுக்கிட்டார்கள். க்வாஜா சாஹிப்வர்களுடைய நெற்றியில் பச்சை நிறமான ரேகையால் "ஹாதா ஹபீபுல்லாஹி மாத்த பீஹுப்பில்லாஹி" (அதாவது: இவர் அல்லாஹ்வுடைய நண்பர்; அல்லாஹுடைய நட்பிலேயே மரித்தார்) என்ற அரபு வாக்கியம் எழுதப்பட்டிருப்பதையும் கண்டார்கள். இன்னலில்லாஹி வஇன்ன இலைஹி ராஜிஊன்.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள் மவுத்தாய்விட்டசெய்தி, மின்சார அலைபோல், நாலாபக்கமும் பரவியது. ஆயிரக்கணக்கான பொது மக்கள் வந்து, கடைசி தரிசனம் (தீதார்) கண்டார்கள். நம் க்வாஜா சாஹிபின் மூத்த புதல்வரான ஹஜ்ரத் க்வாஜா பக்ருத்தீன் அஹ்மத் (ரஹ்) அவர்களே, ஜனஸா தொழுகையை நடத்திவைத்தார்கள். தம், எந்த ஹுஜ்ராவில் வபாத்தானர்களோ அதே ஸ்தலத்தில் புனித பிரேதம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நம் க்வாஜா சாஹிபின் வபாத்துக்குப் பிறகு, அவர்களுடைய புத்திரர்களெல்லாரும் அஜ்மீரை விட்டு வேறு இடங்களுக்கு குடியேறிச் சென்றுவிட்டனர். ஆனல், காதிம்களாகிய ஊழியர்களும், முஜாவிர்களாகிய பரிபாலர்களும் மட்டும் அங்கேயே தங்கி, இன்றளவும், எத்தனையோ கஷ்டங்களும் சோதனைகளும் ஏற்பட்டுங் கூட, க்வாஜா சாஹிபின் பணிவிடையைவிட்டும் விலகாமல் ஊழியம் செய்து வருகிறார்கள்.

## ஸில்ஸிலா என்னும் வம்ச வழி விபரம்

ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்களுடைய வம்ச பரம் பரையானது, ஹஜ்ரத் க்வாஜா பக்ருத்தீன் அஹ்மத் அவர் கள் வழியாய் விருத்தியான பேரன் பேத்திகளேயாவர். க்வாஜா பக்ருத்தீன், நம் க்வாஜா சாஹிப் அவர்களின் மூத்த புதல்வராவர். இன்னாருடைய மஜார் என்னும் கப்ரானது, அஜ்மீரிலிருந்து சுமார் 36 மைல் தூரத்திலுள்ள கிருஷ்ணகட் சமஸ்தானத்தைச் சேர்ந்த 'ஸர்வார்' என்ற இடத்தில் இருக்கிறது.

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி அதாயே ரஸூல் கரீப் நவாஜ் (ரஹ்) அவர்களின் புதல்வர்கள் நான்கு பேர்: 1. க்வாஜா பக்ருத்தீன் அஹ்மத்; 2. க்வாஜா ஹிஸா முத் தீன் (இவர் 'மறைவான பீர்' என்ற வகையில் சேர்ந்து, எங்கோ காணமல் போய்விட்டார்). 3. க்வாஜா ஜியாவுத் தீன் அபூஸயீது (இவர் சிறுவயதிலேயே மவுத்தாகிவிட்டார். மஜார், தர்காவிலேயே இருக்கிறது.) 4. பீபீ ஹாபில் ஜமால் (இப்பெண்மணியின் மஜார், தர்கா கும்பதுக்கு வலது புறம் இருக்கிறது.)

நம் க்வாஜா சாஹிபின் மூத்த புதல்வரான க்வாஜா பக்ருத்தீனின் புதல்வர் க்வாஜா ஹிஸாமுத்தீன் (இவரது மஜார் ஸான்பஹர் என்னுமிடத்தில் இருக்கிறது. இப்பேரப் பிள்ளைக்குப் பிறந்த புதல்வர்கள் இருவர் 1. சின்ன க்வாஜா 2. க்வாஜா கியாமுத்தீன் பாபர்பால்.

ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (ரஹ்) அவர்களுடைய மக்களுடைய ஸில்ஸிலா என்னும் வம்சவழி க்வாஜா சின்ன முஈனுத்தீன், க்வாஜா கியாமுத்தீன் பாபர்பால் வரை யாதொரு அபிப்பிராய பேதமின்றி ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

அக்பர் மஹா சக்கிரவர்த்தி காலத்தில், நம் க்வாஜா சாஹிபுடைய அவ்லாத் (மக்கள்) என்று சொல்லிக் கொண்

டவர்களை ஆராய்ந்ததில், பெரும்பாலோருடைய தாவா (வாதம்) பொய்யானதென்று புலப்பட்டுவிட்டது. உண்மையில் நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிபுடைய அவ்லாத் (பேரர்) களின் 'ஸில்ஸிலா'வானது, க்வாஜா சின்ன முசனுத்தீன், க்வாஜா கியாமுத்தீன் பாபர்பால் - இவர்களுக்குப் பிறகு தொடரவே இல்லை. ஆகையால், இதற்குப்பின், ஸில்ஸிலாவில் சேர்ந்த அவ்லாத் என்று தம்மை சொல்லிக்கொள்பவர்கள் பொய்யர்களாவர். அக்பர் சக்கிரவர்த்தியுங்கூட, க்வாஜா ஹுஸைன் என்ற பேர்வழியை, இப்படி பொய்யான வாதம் புரிந்ததற்காக பல வருஷம் சிறைச்சாலையில் போட்டு தண்டித்திருக்கின்றார்.

நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள் காலஞ்சென்ற பிறகு, ஒவ்வொரு சமயத்திலும், அந்தந்த சமயத்து பெரியோர்களும், தர்வேஷ்களும், பாதுஷாக்களும், அமீர்களும், நம் க்வாஜா சாஹிபின் மஜாருக்கு வந்து ஜியாரத்து செய்து நாட்டம் நிறைவேறிச் சென்றுள்ளார்கள். அக்பர், ஜஹாங்கீர், ஷாஹ்ஜஹான் ஆகிய பாதுஷாக்களும், பல முறை க்வாஜா சாஹிபுடைய சன்னிதானத்துக்கு வந்து பணிந்துப் பயனடைந்ததோடு, பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெரும்படியான ஜாகீர்களை, தர்கா ஷரீபின் பரிபாலனச் செலவுக்காக வக்பு செய்து, தானமளித்துள்ளார்கள். இதன்றி, க்வாஜா சாஹிபுடைய தர்கா ஊழியர்களான எங்கள் பேருக்கும் பல ஜாகீர்கள் தானமளித்துள்ளார்கள். இந்த ஜாகீர்கள் இன்றளவும் எங்கள் பேரால் இருந்து வருவதை எல்லோரும் அறியலாம்.

## ஞாபகர்த்தம்

இதன்றி, பழைய பாஷாக்களும், மன்னர்களும், பற்பல சந்தர்ப்பங்களில், பலப்பல ஞாபகார்த்தக் கட்டிடங்களையும் தர்கா ஷரீபு எல்லைக்குள் நிர்மாணித்து வைத்துள்ளார்கள். அவற்றில் முக்கியமானவைகள்.

மஸ்ஜிதே மஹ்மூதி :—முதன் முதலாக இந்த மஸ்ஜிதை, ஹஜ்ரத் க்வாஜா சாஹிபுடைய மஜாருக்குப் பக்கத்

தில் தலைமாட்டில், ஸுல்தான் மஹ்மூத் கல்ஜி கட்டி வைத்தார். இந்த மஸ்ஜிதே மஹ்மூத்-மஸ்ஜிதே ஆலம்கீரி என்றும், சந்தண மஸ்ஜித் என்றுங் கூட அழைக்கப்பட்டு வருகிறது. ஆலம்கீர் பாஷா, தம்முடைய காலத்தில், மேற்படி மஸ்ஜித் தகர்ந்து சீர் குலைந்து போயிருந்ததால், மராமத் செய்து புதுப்பித்தார் என்றும் தெரிகிறது.

கும்பத் ஷரீப் :—மாண்டு பிரதேசத்தை ஆட்சி புரிந்துகொண்டிருந்த மஹ்மூத் கல்ஜி, இந்த மண்டபத்தை கட்டிவைத்தார். புலந்த் தர்வாஜா என்ற வாயல் வளைவையும் இந்த மன்னரே கட்டிவைத்தார்.

அக்பரீ மஸ்ஜித் :—ஜஹாங்கீர் (என்ற குழந்தை) பிறந்தபோது, அக்பர் சக்கரவர்த்தி, இந்த மஸ்ஜிதை 978-ம் வருஷம் கட்டிவைத்தார்.

மஸ்ஜிதே ஷாஹ்ஜஹானி :—இது ஒரு ஜாமிஆ மஸ்ஜித். இதை ஷாஹ்ஜஹான் மன்னர் கட்டிவைத்தார்.

பேகமீ தாலான்:-இந்த விசாலமான முற்றத்தை, ஜஹான் ஆராபேகம், தம்முடைய சொந்தச்செலவில் கட்டிவைத்தார். பிறகு அதன்மீது தங்கமுலாம் பூசிய வேலையைநவாப் முஷ்தாக் அலிகான்-ராம்பூர் அதிபதி செய்முடித்து வைத்தார்.

கர்நாடகி தாலான் :—கும்பத் ஷரீபுக்கு தெற்குப் புறமுள்ள இந்த விசாலமான முற்றத்தை, கர்நாடக் மன்னரான நவாப் வாலா ஜாஹ் அவர்கள் ஹி. 1207-ல் கட்டி வைத்தார்கள்.

நகார்கானு உஸ்மானி :—நகாரா என்னும் முரசு ஒலிக்கும் இந்த இடத்தை, ஹைதராபாத் (தக்கன்) வேந்தர் ஆலா ஹஜ்ரத் மீர் உஸ்மான் அலிகான் பஹாதுர் கட்டி வைத்தார்.

மஹ்பில் கானு:—பொது சபை கூடும் இந்த இடத்தை நவாப் பஷீருத்தவ்லா ஆஸ்மான்ஜா, கட்டிவைத்தார். அதன் நிர்வாகச் செலவும் அவருடைய மான்யமேயாகும்.

அவ்லியா மஸ்ஜித் :—நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், அஜ்மீருக்கு முதன் முதல் விஜயம் செய்தபோது,

இந்த மஸ்ஜிதில்தான் வந்து தங்கினர். அப்போது இதற்கு "கலந்தரி மஸ்ஜித்" என்று பெயர் இருந்தது. பிறகு கி. பி. 1939-ல் கான் பஹாதுர் முஹம்மத் பக்ஷ் (காத்தியாவார் அதிபதி) இதனை மிக மிக அழகாகவும், அலங்காரமாகவும் செய்து, சிறிதாய், சலவைக் கல்லால் கடிட்வைத்தார்கள்.

இவையன்றி, இன்னும் எத்தனையோ கட்டிடங்களும் ஞாபகார்த்தங்களும், பலப்பல ஜனங்களால் கட்டப்பட்டு இருந்து வருகின்றன. அவற்றின் விபரம் கூற இங்குஇடமில்லை.

## சில விசேஷங்கள்

ஜன்னதீ தர்வாஜா (சுவர்க்க வாயல்) என்பது தர்க்கா தும்பதுக்கு மேற்குப்புறத்தில் அமைந்திருக்கிறது. இந்த வழி வருஷத்தில் நான்கு முறைதான் திறக்கப்படுகிறது. அதாவது:—(1) உருஸ் நடைபெறுங்கால், ஆறு நாட்களுக்கு திறந்திருக்கும். (2) 'ஈதுல் பித்ர்' பெருநாளன்று காலையில் திறக்கப்பட்டு பிற்பகலில் மூடப்பட்டுவிடுகிறது. (3) க்வாஜா சாஹிபின் பீர் முர்ஷிதாகிய மக்தூம் ஆலம் ஹஜ்ரத் க்வாஜா உஸ்மான் ஹிரூனி அவர்களது உருஸின் போது ஷவ்வால்மீ 6-ந்தேதி காலையில் திறக்கப்பட்டு பிற்பகலில் மூடப்பட்டுவிடுகிறது. (4) ஈதுல் அல்ஹா பெருநாளின் போதும், காலையில் திறக்கப்பட்டு பிற்பகலில் மூடப்படுகிறது.

(பரீத் பாபாவின் சில்லா):—சில்லயே ஹஜ்ரத் பாபா பரீத் கன்ஜ் ஷகர் (ரஹ்) எனப்படும் இடம், முஹர்ரம்மீ 5-ந்தேதி, லுஹர் தொழுகைக்குப் பின் திறக்கப்பட்டு பிறகு அதே இரவு மூடப்பட்டு விடுகிறது. சில்லா இருக்கும் இந்த இடத்திருலிருந்து, நம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிபுடைய மஜார் வரைக்கும் இரகசிய வழிபோவதாக ஜனங்களிடையே ஒரு வதந்தி. இது முழுதும் தவறு.

இன்னம், நம் க்வாஜா சாஹிபின் மஜாரானது கீழே மண்ணாலான கப்ராகவும், மேலே தாவீஜ் (சதுரம்) கட்டப்பட்டதாகவும் இருப்பதாய் சொல்லப்படுகிறது. உண்மையில் மஜாரானது அடியிலிருந்து மேல்வரை, உறுதியாய் கட்டிடம் கட்டப்பட்டே இருக்கிறது. உள்ளே காலியே இல்லை.

## " உருஸ் ஷரீப் "

அஜ்மீரி க்வாஜாவின் உருஸ் ஷரீபானது, ஒவ்வோ ராண்டும் ரஜப்மீ 1-ந்தேதி பிறை பார்த்ததிலிருந்து 9-ந் தேதிவரை நடந்து முடிவடைகிறது. ரஜப்மீ 6-ந்தேதி சிறப்பான " குல்-பாத்திஹா தினம் " என்று கொண்டாடப்படும்.

உருஸ் நாட்களில், தேசத்தின் பல திசைகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஆஷிகீன்கள், அபிமானிகள், பக்தர்கள் க்வாஜா சாஹிபின் சன்னிதானத்திற்கு வந்து, வேண்டி, தத்தம் கோரிக்கைகளும் நாட்டங்களும் நிறைவேறப்பெற்றவர்களாய் திரும்பிச் செல்கிறார்கள். இங்ஙனம் நேரில் வந்து வேண்டிக்கொள்ள சௌகரியமில்லாத வெளியூர்காரர்கள், வருடந்தோறும் பாத்திஹா முதலிய செலவினங்களுக்கான பணத்தை அனுப்பிவைத்து துஆ செய்யப்பட்டு நாட்டம் நிறைவேறப்பெறுகிறார்கள்.

உருஸ் அன்றி, ஒவ்வொரு மாதமும் பிறை பார்த்த 6-தினம், க்வாஜா சாஹிப் பெயரால் பாத்திஹா, மவ்லூது, குர்ஆன் ஷரீப் ஓதல், கத்தம் முதலியனவும் வழக்கமாய் நடைபெற்று வருகின்றன. முஹிப்பீன்களுக்கும் க்வாஜா சாஹிபிடம் அகீதா உள்ளவர்களுக்கும், விசேஷமாய் இச் சந்தர்ப்பங்களின்போது ' துஆயே கைர் ' செய்யப்படுகிறது. இதற்காக, அபிமானிகள், மாதந்தோறும் ஒரு தொகையை எமக்கு அனுப்புவார்கள்.

அன்பர்களுக்கு துஆ செய்பவனாகிய இவ்வடிபேனுக்கு, தென் இந்தியா பூராவிலும், ஆயிரக்கணக்கான அபிமானிகளுடையவும், அகீதாக்காரர்களுடையவும் சம்பந்தம் இருந்து வருகிறது. ஏராளமாக அஜ்மீர் ஷரீபுக்கு விஜயம் செய்யும் அபிமானிகளும் முஹிப்பீன்களும் எம்முடைய இல்லத்திற்குத்தான் வந்து தங்கியிருந்து, எம்மால் ஜியாரத்து முதலானவை செய்விக்கப்பட்டு திருப்தி யடைகிறார்கள்.

68373

## நன்றி அறிவிப்பு.

ஆகையால், இப்படிப்பட்ட அபிமானிகளாகிய தென் இந்திய தமிழ் முஸ்லிம்களுக்கு நன்மையாக, நம் ஹஜரத் க்வாஜா சாஹிபுடைய வாழ்க்கை வரலாறு சரித்திர மொன்றை எழுதி பிரசுரிக்க வேண்டுமென்று நெடுங்கால ஆவலுடையவனாக இருந்தேன். இந்த நாட்டம், நான் சென்னைமா நகருக்கு வந்துள்ள இச்சமயத்தில் நிறைவேறி விட்டதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு அதிகமதிக மாக ஷுக்ரு என்னும் நன்றியறிதல் செலுத்துகிறேன்.

"அஜ்மீரி க்வாஜா" என்னும் இந்த ஜீவியச் சுருக் கத்தை அச்சிட்டு வெளிப்படுத்திக்கொடுத்த மஜீதியா பிரஸ் சொந்தக்காரர் ஜனுப் ஹாபிஸ் P. A. ஷாஹுல் ஹமீத் அவர்களுக்கும்; நான் உர்தூவில் இயற்றிய இந்நூலை தமிழ்ப் படுத்தித் தந்த ஜனுப் T. F. ரஹ்மத்துல்லா மஆலி சாஹிப் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி செலுத்து கின்றேன்.

இத்துடன், இந்த புத்தகத்தின் அச்சுக்கூலி காகிதம் முதலிய செலவினத்திற்காக, மனம் உவந்து பண உதவிகள் செய்த கீழ்கண்ட கனவான்களுக்கும் மிக மிக நன்றி செலுத்துகிறேன். இவ்வாறே இவ்வித நற்பிரசார காரியங் களில், க்வாஜா சாஹிபின் விசுவாசிகள் எனக்கு உதவியும், உபசாரமும் செய்து வருமாறு கோருகின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா, க்வாஜா கரீப் நவாஜின் பொருட்டால், எல்லோருக்கும் சுக சௌக்யம் தந்து, ரஹ்மத் செய்வானாக. ஆமீன்.

பொருளுதவி செய்தவர்களின் பெயர்கள் :—

(1) ஜனாப் ஷெய்க் முஹியித்தீன் ராவுத்தர் குமாரர்
S. M. நூருத்தீன் சாஹிப்,
வியாபாரம், சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

(2) ஜனாப் K. தாவூத் சாஹிப் குமாரர்
K. T. ஷெய்க் அப்துல் காதிர் சாஹிப்,
கருவாட் மண்டி, கொண்டி தோப்பு, மதராஸ்.

(3) ஜனாப் V. A. ஷெய்க் மொஹியதீன் சேட் சாஹிப்,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

(4) ஜனாப் P. T. அப்துல் ஹமீத் சாஹிப்,
M. G. மோதீவாலா அண்டு கோ.,
மதராஸ்.

(5) ஜனாப் K. ஸுல்தான் முஹியித்தீன் சாஹிப்,
K. S. மூக்குத்தூள் பாக்டரி, மதராஸ்.

(6) ஜனாப் M. T. இப்ராஹீம் மரைக்காயர் குமாரர்
M. T. E. அமீருத்தீன் மரைக்காயர்,
லாண்ட் லார்டு, வியாபாரம்,
காரைக்கால்.

(7) ஜனாப் B. முஹம்மத் யாஸீன் சாஹிப் குமாரர்
காஜா கமாலுத்தீன்,
புதுச்சேரி,

(8) ஜனாப் S. M. யூனுஸ் சேட், பார்ட்னர்,
இப்ராஹீம் இஸ்ஹாக் சேட் & Co.,
புதுச்சேரி.

(9) ஜனாப் கதீப் S. M. K. ஹுஸைன் சாஹிப்,
தர்கா டிரஸ்டி, நாகூர்.

---

மஜீதிய்யா பிரஸ், ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அறிவிப்பு.

—o—

நமது அச்சுக் கூடமாகிய மஜீதிய்யா பிரஸில் எவ்விதமான அச்சு வேலைகளானுலும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்டுக் கொடுக்கப்படும். அதாவது அறபு, அறபுத் தமிழ், உருது கிதாபுகளும், சுத்த தமிழ் புத்தகங்களும், கல்யாணப் பத்திரிகை துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகளும் அச்சிட்டுக் கொடுக்கப்படும். தேவையானவர்கள், விபரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

இன்னும் நம்மிடத்தில் பல ஊர்களில் அச்சிடப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட குர்ஆன் ஷரீப் ஜுஸ்வு வகைகளும், அரபுத் தமிழ் கிதாபுகளும், உருது, பார்ஸி கிதாபுகளும், செந்தமிழ் புத்தகங்களும் குறைந்த விலைக்கு ரொக்கமாகவும், வி. பி. போஸ்ட் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம் :

மஜீதிய்யா பிரஸ், அண்டு புக் டிபோ,

ஹைரோட், திருவல்லிக்கேணி,

மதருஸ் 5.

அரிய நூல்! பெரிய நூல்

# காஜா முஈனுத்தீன் சிஷ்தீ
## ஆண்டவர்கள் காரணச் சரித்திரம்

இது அஜ்மீர் ஷரீபில் அடங்கியிருக்கும் அவ்லியா நாயகம் கரீப்நவாஸ் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்மதுல்லா) அவர்களின் விரிவான ஜீவிய சரித்திரமும், வாழ்க்கை விசேஷங்களும், அற்புதக் காரமத்துகளும் நிறைந்த நூலாகும். மேலும் அஜ்மீர்தர்காஷரீப், மற்றும் அங்குள்ள கும்பத்கள், மஸ்ஜிதுகள், ஞாபகார்த்த (யாத்கார்) கட்டிடங்கள் முதலிய வற்றின் விபரங்களும்—அவற்றின் அழகிய படங்களுடன் அடங்கி யிருக்கின்றன.

இதன்றி "இந்தியா யாத்திரை என்னும் ஸபர்நாமா" என்ற புத்தகமும் இத்துடன் சேர்க்கப்பட்டு, சுமார் 124 பக்கங்கள் கொண்ட பெரிய நூல் இது.

இத்துடன் ஹிந்துஸ்தான் சுற்றுப் பிரயாணத்துக்கு உதவியான ரயில்வே மேப்பும், 'மைலேஜ்' விபரங்களும் தனியாக சேர்க்கப்பட்டிருக்கிறன.

**திரமான கிளேஸ் கடிதம் விலை ரு. 1-4-0**

விலாசம்:—

**மஜீதியா பிரஸ், & புக் டிப்போ,**

**701, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.**